செய்தி வெளியீடு எண்:240 நாள்: 27.04.2017

**தமிழ்நாடு மின் ஆளுமை முகமை**
**அரசு இ–சேவை மையங்களில் 02.05.2017 முதல் கைபேசி எண் கட்டாயமாக்கப்படுகிறது**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மேற்பார்வையின் கீழ், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு குழுக்கள் ஆகியவற்றின் வாயிலாக தற்பொழுது 10,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான அரசு இ–சேவை மையங்கள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கு அரசின் சேவைகளை விரைவாகவும் வெளிப்படையாகவும் அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே அளிப்பது இதன் நோக்கம் ஆகும்.

இச்சேவை மையங்கள் மூலம், வருமானச் சான்றிதழ், வகுப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ், முதல் தலைமுறை பட்டதாரிச் சான்றிதழ், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய மின் ஆளுமை அரசு சேவைகள் வழங்கப்படுகிறது. மேலும், இந்த சேவை மையங்கள் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம், சென்னை பெருநகர மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரியை செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சேவை மையங்கள் வாயிலாக சேவைகளை பொதுமக்களுக்கு விரைவாக வழங்குவதற்கு வசதியாக அரசால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக அனைத்து இ–சேவை மையங்களிலும் 2.5.2017 முதல் கைபேசி எண் கட்டாயமாக்கப்படுகின்றது. முதன் முறையாக இ–சேவை மையத்திற்கு செல்பவர்கள், தங்களது கைபேசி எண்ணினை கணினி பொறுப்பாளர்களிடம் கொடுத்து, பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்த பின் தங்களது கைபேசிக்கு தாங்கள் விண்ணப்பித்த சேவைக்கான விண்ணப்ப எண் மற்றும் சேவைக் கட்டணம் குறித்த விவரங்கள் குறுஞ் செய்தியாக அனுப்பப்படும். விண்ணப்பத்தின் தற்போதைய நிலையினை அறிந்து கொள்ள 155250 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பி தெரிந்து கொள்ளலாம். மேலும்

விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படும் சந்தேகங்கள் மற்றும் விவரங்களை கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு ( 1800 425 1333) தொடர்பு கொண்டு தீர்வு பெற்று கொள்ளலாம்.

விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, சான்றிதழ் தயாரானதும், பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும். அக்குறுஞ்செய்தி வாயிலாக, இணையம் வழியாக பொதுமக்கள் தங்களது சான்றிதழ்களைப் பார்வையிட இயலும்.

எனவே, பொதுமக்கள் 2.5.2017 முதல் இ–சேவை மையங்களுக்கு செல்லும் பொழுது தவறாமல் தங்களது கைபேசி எண்ணை பதிவு செய்து மேற்கூறிய பயன்களை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**